# நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)

**Gov/CIDA/Directive/104/2026**

## நிர்மாண ஒப்பந்தங்களுக்கான கேள்விமனு கோரலில் CIDA தரங்களை தெரிவு செய்தல் மற்றும் சிறிய தரங்களுக்கான அனுபவத் தேவையை விலக்களித்தல் பற்றிய பணிப்புரை

**CIDA தரப்படுத்தல் முறைமை**

2024.08.21 ஆம் திகதிய CP/24/1605/618/076 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரை இலக்கம் 3.20 இற்கு இணங்கவும், அதன் பின்னர் 2026.04.28 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள CP/26/0641/827/027 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலமான அதன் செயற்படுத்துகைக்கு இணங்கவும், அத்துடன் 2026.05.12 ஆம் திகதிய NPC/PP/01/CL 208/2025 ஆம் இலக்கக் குறிப்பின் கீழ் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் (NPC) வழங்கப்பட்ட பரிந்துரைக்கு இணங்கவும், தேசிய பெறுகை ஆணைக்குழுவின் (NPC) வழிகாட்டி 5.6.1 இன் பிரகாரம், CIDA முறைமையில் பதிவுசெய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வது தொடர்பான பின்வரும் பணிப்புரைக்கு இயைந்தொழுகுமாறு அனைத்து தொழில்தருநர்களும் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

| ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் மதிப்பிடப்பட்ட பெறுமானம் X (VAT மற்றும் ஏனைய வரிகள் தவிர்ந்த) - ரூபா மில்லியன் | CIDA தரம்/கள் |
|---|---|
| 4.0 ≥ X | $C_9$ ,$C_8$ மற்றும் $C_7$ |
| 10.0 ≥ X > 4.0 | $C_8$ ,$C_7$ மற்றும் $C_6$ |
| 20.0 ≥ X > 10.0 | $C_7$ ,$C_6$ மற்றும் $C_5$ |
| 50.0 ≥ X > 20.0 | $C_6$ ,$C_5$ மற்றும் $C_4$ |
| 100.0 ≥ X > 50.0 | $C_5$ ,$C_4$ மற்றும் $C_3$ |
| 300.0 ≥ X > 100.0 | $C_4$ மற்றும் அதற்கு மேல் |
| 600.0 ≥ X > 300.0 | $C_3$ மற்றும் அதற்கு மேல் |
| 1200.0 ≥ X > 600.0 | $C_2$ மற்றும் அதற்கு மேல் |
| 3000.0 ≥ X > 1200.0 | $C_1$ மற்றும் அதற்கு மேல் |
| 6000.0 ≥ X > 3000.0 | $CS_1$ மற்றும் அதற்கு மேல் |
| X > 6000.0 | $CS_2$ |

**குறைந்த CIDA தரங்களுக்கான (C7, C8, C9, EM4, EM5, SP4 மற்றும் SP5) ஒப்பந்தங்களைத் தெரிவு செய்வதிலும் மற்றும் கேள்விமனு ஒப்பந்தங்களை வழங்குவதிலும் வேலை அனுபவம் தொடர்பான தேவைப்பாடுகள்**

மேற்கூறப்பட்ட தரங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கோரப்படும் வேலை தொடர்பான அனுபவச் சான்றிதழ்களை சமர்ப்பிக்க இயலாத சந்தர்ப்பங்கள். தொழில்தருநர்கள் நியம கேள்விமனு ஆவணங்களின் (SBDs) ஏற்பாடுகளுக்கு இணங்க, பொருத்தமானவாறு ஒப்பந்தப் பெறுமானத்தின் அதிகபட்சம் பத்து சதவீதம் (10%) வரை செயலாற்றுகைப் பிணைமுறித் தேவைப்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கையானது தேசிய பெறுகை ஆணைக்குழுவுடன் (NPC) கலந்தாலோசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் 2026.05.12 ஆம் திகதிய NPC/PP/01/CL/208/2025 ஆம் இலக்க பெறுகை தேசிய ஆணைக்குழுவின் கடிதத்தின் மூலம் CIDA அறிவிக்கவும்பட்டுமுள்ளது.

---

இதற்கமைய, உரிய ஒப்பந்தப் பெறுமான அளவுகளுக்குள் கேள்விமனுக்களை கோரும் போது, தொழில்தருநர்கள் பின்வரும் தெரிவுகளை உள்ளடக்கி, நடைமுறைப்படுத்த வேண்டும்.

1. ஏற்றுக்கொள்ளத்தக்க வேலை அனுபவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு:

செயலாற்றுகைப் பிணைமுறி ஒப்பந்தப் பெறுமதியின் ஐந்து சதவீதமாக (5%) பேணப்படுதல் வேண்டும்.

2. வேலை அனுபவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்காத ஒப்பந்தக்காரர்களுக்கு:
செயலாற்றுகைப் பிணைமுறி ஒப்பந்தப் பெறுமானத்தின் பத்து சதவீதம் (10%) வரை அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

***மேற்கூறப்பட்ட பணிப்புரையானது, மறுஅறிவித்தல் வரை 2026 ஜூன் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.***

**தலைவர்**,
**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**